e-Learning Programme - 2020

Grade - 8 | **Assignment - 01** | **Catholism**

எல்லா வினாக்களுக்கும் விடையளியுங்கள். உங்கள் விடைகளை பாடநூலின் துணையுடன் சரி பாருங்கள்.

1. **மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

2. பவுலின் தூதுரைப்பயணங்களில் ..... பங்கு பற்றினார்.
   1.பேதுரு 2.சீமோன் 3.லூக்கா 4. அந்திரேயா

3. இயேசுகிறிஸ்துவின் தலைமுறையை குல முதுவரிலிருந்து ஆரம்பிக்கும் நற்செய்தியாளர் ,
   1.லூக்கா 2.மத்தேயு 3.மாற்கு 4.யோவான்

4. 'தியோபில்' என்ற பெயரின் அர்த்தம் ,
   1.இறைவனின் தூதன் 2.ஆண்டவரின் நண்பன்
   3.கடவுள் நம்மோடு 4.இறைவன் மீட்கின்றார்

5. ஆண்டவர் ஆபிரகாமிற்கு வழங்கிய வாக்குறுதியாவது,
   1.நாடு,மரம் ,மகன் 2.இனம் ,நாடு,குடும்பம்
   3.நாடு,இனம் ,ஆசீர் 4. ஆசீர்,நாடு,ஆலயம்

6. ஆபிரகாம் ஆரோனை விட்டுச்சென்ற போது அவருக்கு எத்தனை வயது?
   1. 80 2. 76 3. 75 4. 90

7. திருமுழுக்கு யோவான் யார் யாருக்கு அறிவுரை வழங்கினார்?
   1.படைவீரர் 2.சதுசேயர் 3.அரசர்கள் 4.சீடர்கள்

8. இயேசு சோதனைகளை வெற்றி கொண்டபின் சென்ற இடம் ,
   1.சமாரியா 2.யெருசலேம் 3.கலிலேயா 4.யூதேயா

9. நாசரேத்து தொழுகைக்கூடத்தில் இயேசு வாசித்த ஏட்டுச் சுருள்,
   1.எசக்கியேல் 2.ஓசேயா 3.எசாயா 4.எரேமியா

10. இறையாட்சிபற்றி கூறப்படும் உவமை,
    1.புதையல் , முத்து , வலை 2. காணாமற்போன ஆடு
    3.ஊதாரிமகன் 4.பத்து கன்னியர்

11. இயேசு செய்த புதுமைகளின் வகைகளின் எண்ணிக்கை ,
    1. 4 2. 7 3. 3 4. 2

12. நற்கருணையின் சிறப்பியல்புகளாவன ,
    1.நன்றி கூறுதல் 2.மன்னிப்பு 3.மன்றாட்டு 4.புதுமை

13. நற்கருணையின் முன்னடையாளம் ,
    1. மன்னா 2.செங்கடலைக் கடத்தல் 3.அருளடையாளம் 4.நீர்

www.kedu.lk

14. ஆன்மீக ஆயத்தம் பற்றி ..... குறிப்பிடுகின்றார்.

1.யோவான் 2.மாற்கு 3.சீலா 4.பவுல்

15. தூயஆவியின் கொடைகளுள் ஒன்று ,

1. அமைதி 2.அறிவு 3.விசுவாசம் 4.அன்பு

16. தூயஆவியின் கனிகள் ,

1. 7 2. 8 3. 12 4. 14

17. நல்லவற்றை கடைபிடிக்கவும் தீயவற்றை முற்றாக விலக்கவும் வழங்கப்படும் திருக்கொடை ,

1. ஞானம் 2. திடம் 3. புத்தி 4. விமரிசை

18. தூய திரித்துவத்தின் மறை பொருள் ,

1. மாதா , பிதா , தெய்வம் 2. மாதா , பிதா , குரு

3. பிதா , சுதன், தூய ஆவி 4. தந்தை, சுதன், குரு

19. உமது மறை மாவட்டத்தின் தற்போதைய ஆயர் ,

1. அதி.வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை 2. ஆதி.வண.வியான் பெர்ணான்டோ

3.அதி.வண.இம்மானுவல் பெர்ணாண்டோ 4.அதி.வண. மெல்கம் ரஞ்சித்

20. தூய யோசேவாஸ் எப்போது புனிதராக உயர்த்தப்பட்டார்?

1. 2016.08.24 2. 2018.01.16 3. 2013.04.13 4. 2010.06.10

21. திருத்தந்தை பிரான்சிஸ் எத்தனையாம் திருத்தந்தையாவார் ?

1. 246 2. 260 3. 266 4. 253

(20 X 2=40 புள்ளிகள்)

பகுதி 2

2. சரியான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

1. ..... விரைவாய் இறங்கி வாரும் , இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்." (பக்கம் 10)
2. ஆண்டவரே எனது உடமைகளில் பாதியை ..... கொடுத்து விடுகிறேன்." (பக்கம்10)
3. அவருடைய தந்தை , ... அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். (பக்கம் 33)
4. "..... தலையை ஒரு தட்டில் வைத்து இங்கேயே எனக்குக் கொடும்" என்று கேட்டாள். (பக்கம் 43)
5. ஆண்டவர் ..... கூறிய படியே அவர் புறப்பட்டுச்சென்றார்.அவருடன் ..... சென்றார். (பக்கம் 28)

(5x4=20 புள்ளிகள்)

www.lkedu.lk

3. விடை தருக.

1. 1. தூய லூக்கா நற்செய்தி எழுதப்பட்ட காலப்பகுதி எது? (பக்கம் - 9)

2 . தூய லூக்கா நற்செய்தியின் அடையாளம் என்ன?

3 லூக்கா நற்செய்திக்கு வழங்கப்படும் வேறு இரண்டு பெயர்கள் தருக.
(பக்கம் -10 -16)

4 இயேசுவின் குழந்தைப்பருவ நிகழ்ச்சிகளை தூய லூக்கா விபரிக்குமாற்றை கூறுக.
(பக்கம் 23)

5 . லூக்கா நற்செய்தியிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினைகள் நான்கு தருக.
(பக்கம் 18-21)

2. 1. இயேசுவின் வருகைக்காக வழியை ஆயத்தம் செய்தவர் யார்? (பக்கம்-38)

2. அவரது தாய் , தந்தையின் பெயர் என்ன? (பக்கம் -38)

3. அவரது தோற்றத்தை விவரிக்குக. (பக்கம் 39)

4. மனமாற்றத்தின் முக்கியத்துவம் பற்றிய அவரது விளக்கம் யாது? (பக்கம் 40)

5. அவரது வாழ்விலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகைகள் 3 எழுதுக.
(பக்கம் 39 -42)

(2 x 10 = 20 புள்ளிகள்)

3. 1. இயேசுவின் பாலைவன சோதனையை எழுதுக. (பக்கம் 46)

2. திருமுழுக்கினால் நாம் பெறும் அருள்கள் 4 குறிப்பிடுக. (பக்கம் 45)

3. இயேசுவின் வாழ்விலிருந்து நீர் பெறும் படிப்பினைகள் 5 ஐ எழுதுக. (பக்கம் 48)

(2+3+5=10 புள்ளிகள்)

4. 1. புதுமை என்றால் என்ன? (பக்கம் 55)

2. இயேசு செய்த புதுமையை வகைப்படுத்தி உதாரணம் தருக. (பக்கம் 55)

3.இயேசு செய்த புதுமை ஒன்றை குறிப்பிட்டு விளக்குக. (பக்கம் 56 - 60)

(2+3+5=10 புள்ளிகள்)

www.kedu.lk